# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2100/12 - 2018 දෙසැම්බර් මස 05 වැනි බදාදා - 2018.12.05

*2100/12 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (xv)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் (2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 2038/75 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும்) 1996 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதிய 916/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதுமான கட்டளைக்கான அட்டவணையை, அத்தகைய கட்டளைக்கான அட்டவணை* II *இல் "பீடம்" என்னும் தலைப்பின் கீழ்* I *ஆம் நிரலில் காணப்படுகின்ற "பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்" என்னும் விடயத்துக்கு நேரொத்ததாகவுள்ள "கற்கைத்துறை" என்னும் தலைப்பின் கீழ்* II *ஆம் நிரலில் காணப்படுகின்ற "(இ) கணிதவியல் விஞ்ஞானங்கள் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவினைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.*

*"(ஈ) இரசாயன விஞ்ஞானங்கள் துறை".*

*கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ,*
*கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2018, நவெம்பர் 26.*

*12-501*


1A - PG 4330 — 508 (2018/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.